

# எழுப்புதலே

## எங்கள் வாஞ்சை


தொகுப்பு

பாஸ்டர் ஜெரி டேனியல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

ஆண்டவராகிய இயேசுவின் வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. அவருடைய வருகைக்கு முன் தேவன் ஒரு பெரிய ஆவிக்குரிய எழுப்புதலை தேசங்களில் கட்டளையிட வாஞ்சையாயிருக்கிறார். கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என்னுடைய ஆவியை ஊற்றுவேன் என்று வாக்குப்பண்ணினவர் இந்த கடைசி நாட்களில் உலகெங்கும் பின்மாரி மழையை ஊற்றிக்கொண்டிருக்கிறார். அனலுமின்றி, குளிருமின்றி, நிர்விசாரமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் திருச்சபை மக்களை தேவன் தட்டி எழுப்பிக்கொண்டிருக்கிறார்.

உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கில் ஒரு எழுப்புதலைக் கொண்டு வந்து மகா திரளான சேனையாக நிற்கச் செய்த தேவன், நம்மையும் உயிரடையச் செய்து அவருக்காக எழும்பி பிரகாசிக்கச் செய்ய ஆவலாயிருக்கிறார். வேதாகமத்திலும், சபை சரித்திரத்திலும் தேவன் கொண்டு வந்த எழுப்புதலைக் குறித்து நாம் அறியும்போது, எழுப்புதலைக் குறித்த தாகம் நமக்குள் நிச்சயம் உண்டாகும்.

இந்த **எழுப்புதலே எங்கள் வாஞ்சை** என்ற தொகுப்பு உங்கள் வாழ்வில் எழுப்புதலை குறித்த வாஞ்சையை நிச்சயம் அதிகரிக்கச் செய்யும் என விசுவாசிக்கிறேன். வாசியுங்கள்! வாஞ்சியுங்கள்! வல்லமையாய் எழுந்துப் பிரகாசியுங்கள்!

பாஸ்டர் **ஜெரி டேனியல்**

# எழுப்புதல் என்றால் என்ன ?
# What is Revival?

எழுப்புதல் என்பது ஆவிக்குரிய வாழ்வில் உள்ள பின்மாற்றங்கள், மந்த நிலைமைகள், நிர்விசாரங்கள் மற்றும் செத்த நிலைகள் மாறி ஆவிக்குரிய உயிர்மீட்சி அடைவது. ஆதியிலுள்ள அன்புக்குத் திரும்புவது. இழந்து போனதைத் திருப்பம் பெற்றுக் கொள்ளுவது. பாவ உணர்வடைந்து தேவனுடைய பரிசுத்தத்திற்குத் திரும்புவது. தேவனுக்காக எழுந்து சுறுசுறுப்பாக செயல்படுவது.

எழுப்புதலைக் குறித்துப் பரிசுத்தவான்கள் கூறுவதைக் கேட்போம்.

- எழுப்புதல் என்பது பாவ உணர்வடைந்து, மனந்திரும்பி, தேவனுக்குக் கீழ்படிந்து வாழ ஒரு தீவிர வாஞ்சையும் விருப்பமும் பெறுவது – **சார்லஸ் பின்னி.**
- எழுப்புதல் என்பது பூமியில் பரலோகத்தை அனுபவிப்பது – **மார்டின் லாய்ட் ஜோன்ஸ்.**
- எழுப்புதல் தேவ பிரசன்னத்தின் மேல் தாகத்தையும், தேவன் மேல் அளவற்ற அன்பையும், பாவத்தின் மேல் வெறுப்பையும், வசனத்தின் மேல் வாஞ்சையையும் உண்டாக்குகிறது. – **டெல் பெசன்பெல்ட்**
- எழுப்புதல் என்பது தேவன் சபையை சுத்திகரிப்பது – **எர்வின் லுட்சர்**
- எழுப்புதல் என்பது சமுதாயம் தேவ பிரசன்னத்தினால் நிரப்பப்படுவது – **டன்கன் கேம்ப்பெல்**
- எழுப்புதல் என்பது தேவனுடைய மகிமை, வல்லமை, ஆசீர்வாதங்கள் தேவ ஜனங்கள் மேல் ஊற்றப்படுவது – **ஸ்டீபன் ஆல்போர்ட்**

எழுப்புதலை விவரிக்க தேவ மனிதர்கள் கீழ்க்கண்ட பல்வேறு வார்த்தைகளை பயன்படுத்தியிருக்கின்றனர்.

- **ஆவிக்குரிய மறுமலர்ச்சி** (Spiritual Awakening)
- **ஆவிக்குரிய எழுப்புதல்** (Spiritual Revival)
- **ஆவிக்குரிய புதுப்பித்தல்** (Spiritual Renewal)
- **பரிசுத்த ஆவியின் மாமழை** (Outpouring of the Spirit)

எழுப்புதல் தான் இன்றைய தலையாய தேவை! எழுப்புதல் மூலம் தான் தேசம் முழுவதையும் மிகச் சீக்கிரமாகச் சந்திக்க முடியும். எழுப்புதலால் தான் சபை பரிசுத்தமடையும். எழுப்புதலால் தான் ஜனங்கள் துரிதமாய் சந்திக்கப்பட முடியும்.

# எழுப்புதல் எப்போது தேவை?
# When do we need Revival?

1. ஆதியிலிருந்த அன்பு இப்பொழுது குறைந்திருக்குமாயின் எழுப்புதல் தேவை.
2. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை மகிழ்ச்சியில்லாமல் இருக்குமானால் எழுப்புதல் தேவை.
3. பாவத்தின் மீது வெறுப்பு இல்லாதிருந்தால் எழுப்புதல் தேவை.
4. சபை காரியங்களில் ஈடுபாடு குறைவாக இருப்பின் எழுப்புதல் தேவை.
5. நித்தியத்தைக் குறித்துச் சிந்திக்காமல், நம்முடைய சுய காரியங்களுக்காகவே கவனம் செலுத்துவோமென்றால் எழுப்புதல் தேவை.
6. நாம் ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பு குறையும்போது எழுப்புதல் தேவை.
7. கசப்பு, பொறாமை, விரோதம், புறங்கூறுதல் இவைகள் பெருகி இருப்பின், நிச்சயம் எழுப்புதல் தேவை.
8. உலகப் பிரகாரமான வாழ்க்கையில் அதிக ஈடுபாடு இருப்பின் தேவை.

   உதாரணம் : அதிக நேரம் டி.வி பார்ப்பது, வேதத்தை வாசிக்காமல் பிற புத்தங்களை வாசிப்பது, அதிக நேரம் தூங்குவது, சினிமா பார்ப்பது அரட்டை அடிப்பது, கேளிக்கை விடுதிகள், விளையாட்டு அரங்குகள், செல்போன் இவைகளால் அதிகம் ஈர்க்கப்படுதல்.
9. பொய் சொல்லுதல், திருடுதல், கீழ்ப்படியாமை அதிகம் இருந்தால் எழுப்புதல் தேவை.
10. பணத்தைக் கொடுப்பதைக் காட்டிலும், சம்பாதிப்பதில் மட்டும் அதிக கவனம் செலுத்துவோமானால் எழுப்புதல் தேவை.
11. தேவனை ஆராதிப்பது, ஜெபிப்பது, தேவனுக்கென்று நேரம் செலவழிப்பது மிகக் குறைவாக இருக்கும்போது எழுப்புதல் தேவை.
12. ஊழிய வாஞ்சை, ஆத்தும பாரம் இல்லாதிருக்குமாயின் எழுப்புதல் தேவை.

## பரிசுத்த ஆவியானவரின் எழுப்புதலே நமது தேவை

**"சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள், அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப் பண்ணுவார்"**
**(யோவேல் 2:23).**

தேவனே எழுப்புதலைத் தருகிறவர். எழுப்புதலின் போது ஜனங்கள் திரளாய்க் கிறிஸ்துவிடம் திருப்பப்படுகிறார்கள். பல்லாண்டுகளாய்ப் பதிலளிக்கப்படாத ஜெபங்கள் மகிமையாய் பதிலளிக்கப்படும். பாவிகள் தேவனுடைய பிரசன்னத்தில் தங்கள் பாவங்களினால் பயந்து நடுங்குவார்கள். கதறி மனங்கசந்து அழுவார்கள். அநேகர் எழுப்புதல் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்கிற ஒரு அசாதாரணமான ஈர்ப்புக்குள்ளாவார்கள். சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்படும். ஜனங்கள் கர்த்தரிடத்தில் திரளாய் திரும்புவார்கள்.

எழுப்புதல் சில சமயங்களில் தனிப்பட்ட மனிதர்கள் மூலமாக வந்திருக்கிறது. உதாரணமாக இவான் ராபர்ட்ஸ் மூலம் வேல்ஸ் நாட்டு எழுப்புதல் (Welsh Revivals) 1904-1905 ஆண்டுகளிலும், டங்கன் காம்ப்பெல் மூலம் ஹெபரைட்ஸ் எழுப்புதல் (Hebrides Revivals) 1949-53, 1957 ஆண்டுகளிலும் நிகழ்ந்துள்ளது. சில சமயங்களில் சில குழுக்கள் அல்லது இயக்கங்கள் மூலமும் எழுப்புதல் வந்திருக்கிறது. உதாரணமாக இந்தியாவில் பண்டித ரமாபாயின் முக்தி மிஷனில் 1901-1905 ஆண்டுகளில் உண்டான எழுப்புதலைக் கூறலாம். இப்படிப்பட்ட மேன்மையான எழுப்புதலை நாம் இந்தக் கடைசி காலங்களில் காணத் தாகம் கொள்வோம். எழுப்புதலின் நாயகராகிய நம்முடைய தேவன் பின்மாரியை வருஷிக்கச் செய்வாராக.

## வேதாகம நாட்களில் உண்டான எழுப்புதல்

### 1. ஆசா மற்றும் யோசபாத் ஆகியோரின் நாட்களில் காணப்பட்ட எழுப்புதல்.

2 நாளாகமம் 14, 15, 17, 19, 20 அதிகாரங்கள்.

யூதாவின் ராஜாவாகிய ஆசா தனது ஆட்சியில் அமைதி நிலவின முதல் பத்து ஆண்டுகளில், தேசம் முழுவதும் மீண்டும் தேவன் பக்கம் திரும்ப தனது ஆற்றலைப் பயன்படுத்தினான். பலிபீடங்களைத் தகர்த்தான். அந்நிய தெய்வ வழிபாட்டை நிறுத்தினான். விக்கிரக தோப்புகளை அழித்தான் (2 நாளா. 14 : 15). எகிப்திய படைத் தலைவன் சேராவின் மிகப்பெரிய சேனையைத் தனது சிறிய சேனையைக் கொண்டு ஜெயித்தான். ஜனங்களை தேவனோடு

உடன்படிக்கை செய்யச் செய்தான் (2 நாளா. 15:12). வேதம் ஆசாவின் வாழ்வைக் குறித்து, "...ஆசாவின் இருதயம் அவன் நாட்களெல்லாம் உத்தமமாயிருந்தது" என்று கூறுகிறது (2 நாளா. 15 : 17) .

ஆசாவைத் தொடர்ந்து அவன் குமாரன் யோசபாத்தும் தன் தகப்பனின் அதே தீவிரத்துடனும், இன்னும் அதிக வைராக்கியத்துடனும் செயல்பட்டான். **"கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகம் கொண்டது" (2 நாளா. 17 : 6). "யூதாவைச் சுற்றியிருக்கிற தேசங்களுடைய ராஜ்யங்களின் மேலெல்லாம் கர்த்தரால் உண்டான பயங்கரம் வந்ததினால், யோசபாத்தோடு யுத்தம் பண்ணாதிருந்தார்கள் (2 நாளா. 17:10).**

2 நாளாகமம் 20ம் அதிகாரத்தில் யூதா ஜனங்களுக்கு எதிர்த்து வந்த மோவாபியர், அம்மோனியர் மேல் மிகப்பெரிய வெற்றியை தேவன் யோசபாத்துக்குக் கொடுத்தது மிகப்பெரிய எழுப்புதலை யூதாவில் ஏற்படுத்தியது.

**2. எசேக்கியாவின் நாட்களில் உண்டான எழுப்புதல்**

2 நாளாகமம் 29, 30, 31, 32 அதிகாரங்கள்.

எசேக்கியாவின் தகப்பனான ஆகாஸ் யெகோவா தேவனுக்குக் கீழ்படியாமல் அதிக பொல்லாப்பானதைச் செய்தவனாய் இருந்தான். இந்த ஆகாஸ்-க்குப் பிறந்த எசேக்கியா, தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் தொடர்பினால் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து தேசத்தில் எழுப்புதல் உண்டாகக் காரணமாயிருந்த ராஜாவாயிருந்தான்.

**இக்காலத்தில் நடந்த சில காரியங்கள் பின்வருமாறு :**

- பூட்டிக்கிடந்த தேவாலயத்தைத் திறந்து அதை பழுது பார்த்தான். 2 நாளா. 29 : 3.
- ஆசாரியர்களையும், லேவியர்களையும் அழைத்து தேவாலயத்தை முந்தின சீருக்குக் கொண்டு வரக் கட்டளையிட்டான். 2 நாளா. 29 : 5.
- தேசத்தின் பாவநிவிர்த்திக்காக தேவாலயத்தில் பலிகளைச் செலுத்தினான். 2 நாளா. 29 : 21.
- தேவாலயத்தில் ஆராதனையை ஏற்படுத்தினான். பாடகர்களும், இசைக்கருவி வாசிப்பவர்களும், ஏற்படுத்தப்பட்டார்கள். 2 நாளா. 29 : 25, 26.
- அந்நிய பலிபீடங்களையும், விக்கிரகத் தோப்புகளையும் அழித்தார்கள். 2 நாளா. 31 : 1.

- அசீரிய ராஜா எதிர்த்து வந்த போது தேவனிடம் அபயமிட்டதினால், கர்த்தருடைய தூதன் இரவில் அசீரியரில் 1,85,000 பேரைக் கொன்றதினால் மிகப் பெரிய வெற்றி கிடைத்தது. 2 நாளா. 32:7,8

**3. எலியாவின் நாட்களில் உண்டான எழுப்புதல்** :

1 இராஜாக்கள் 17ம் அதிகாரத்தில் இஸ்ரவேலின் ஆவிக்குரிய பரிதாப நிலையையும், கர்த்தர் எலியாவைக் கொண்டு 3 1/2 ஆண்டுகள் மழை பெய்யாது என்று சொன்னதையும், 18ம் அதிகாரத்தில் கர்மேல் பர்வதத்தில் தான் ஒருவனாய். கர்த்தர் பட்சம் நின்று "கர்த்தரே தேவன்" என்று நிரூபித்ததையும், அதனால் இஸ்ரவேல் தேசம் முழுவதும் பாகால் வணக்கத்தை விட்டு கர்த்தரிடம் திரும்பியதையும் காண்கிறோம்.

**4. எஸ்றாவின் நாட்களில் உண்டான எழுப்புதல்** :

எஸ்றாவின் நாட்களில் யூதா ஜனங்கள் வாழ்வில் கீழ்க்காணும் காரியங்களில் பெரிய எழுப்புதல் உண்டாயிற்று.

- ஜெபமும், உபவாசமும். எஸ்றா 9:6-15
- நியாயப்பிரமாணத்தின் ஒழுங்களுக்கும், தேவனிடத்துக்கும் மக்கள் பாவ உணர்வடைந்து திருப்புதல். எஸ்றா 10:1-4
- கலப்பு திருமணம் ஒழிக்கப்படுதல். எஸ்றா 10 : 44.

**5. நினிவேயில் எழுப்புதல்** :

புறஜாதிகள் நகரமாகிய நினிவேயின் பாவத்தின் கூக்குரல் தேவனை எட்டினதால் நியாயத்தீர்ப்பு கொடுக்க தேவன் தீர்மானிக்கிறார். யோனா தீர்க்கதரிசியை அங்கு தேவன் அனுப்புகிறார். இவனது செய்தியைக் கேட்ட நினிவே பட்டணத்தார் ஒரு லட்சத்து இருபதினாயிரம் பேரும், ராஜா உட்பட அழுது, உபவாசம் பண்ணி, இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து தேவனிடம் மன்னிப்புக் கேட்டு மனந்திருப்புகிறார்கள். தேவனும் தான் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு மனம் மாறுகிறார். ஒரு பெரிய எழுப்புதல் உண்டாகிறது (யோனா 3:1-10).

**6. பெந்தெகொஸ்தே நாளின் எழுப்புதல்**

பெந்தெகொஸ்தே நாளில் ஏற்பட்ட எழுப்புதலை அப்போஸ்தலர் நடபடிகளில் பார்க்கிறோம். முதலாம் நூற்றாண்டில் ஆசியாவையே குலுக்கிய ஆதித்திருச்சபையின் எழுப்புதல் எழுப்புதல்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரி எனக் கூறலாம். அப்போஸ்தலர் காலத்தில் நடைபெற்ற இந்த எழுப்புதலில் குறிப்பிடத் தகுந்த காரியங்கள் யாதெனில்:

- பரிசுத்த ஆவியானவரின் அளவற்ற ஊற்றப்படுதல்
- ஜனங்கள் ஆயிரமாயிரமாய் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொள்ளுதல்
- சபையின் அசாதாரண வளர்ச்சி
- சாதாரண மனிதர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தியது
- இயேசு செய்ததைவிட மிகப்பெரிதான அற்புதங்களும் அடையாளங்களும்
- சுவிசேஷம் மிகத் தீவிரமாய் அன்றைக்கிருந்த உலகம் முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டு அறிவிக்கப்பட்டது.
- விசுவாசிகள் எல்லோரும் ஊழியம் செய்தனர்
- உபத்திரவங்கள் அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்குப் பதில் அதிக தீவிரமடையச் செய்தது.

## சபை சரித்திரத்தில் உண்டான எழுப்புதல்கள்

அப்போஸ்தலர்களின் காலத்தைத் தொடர்ந்து இன்றைய காலம் வரை தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலம் ஜனங்களுடைய வாழ்வில் தனது இரட்சிப்பின் கிரியையை நடத்துவதை நிறுத்தவே இல்லை. தொடர்ந்து பரிசுத்த ஆவியானவர் திருச்சபையில் கிரியை செய்து வந்திருப்பதை சபைச் சரித்திரத்தில் காண்கிறோம்.

கி.பி. நான்காம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் அரசாங்க மதமாக அறிவிக்கப்படும் வரைக்கும் நிலவிய உபத்திரவத்தினால் எந்த கிறிஸ்தவ இலக்கியத்தையும் பாதுகாக்க முடியாத சூழல் இருந்தது. அவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அதனாலெயே முதல் நான்கு நூற்றாண்டுகளில் இருந்த சபைகள் பற்றியும், சபைத்தலைவர்கள் பற்றியும் நமக்கு அதிகமான சான்றுகள் இல்லை. ஆனாலும் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜஸ்டின் மார்ட்டைர் (கி.பி 100 – 165) என்பவர் எழுதிய “Dialogue with Trypho” என்ற நூலில் அந்த காலத்திலேயும் கூட ஆவியின் அபிஷேகமும் வரங்களும் கனிகளும் நிறைந்த விசுவாசிகள் அநேகர் இருந்ததாகச் சொல்கிறார்.

ஆனால் அந்த அனல் சபைக்குள்ளே பிற்காலங்களிலே ரோம ஆதிக்கம் வந்த பின்பு படிப்படியாக மங்கி பின்னர் ஒரேயடியாக இருண்டு விட்டது. இந்த சூழலிலும் கூட தேவன் புனித அசிசியின் பிரான்சிஸ் போன்ற வல்லமையான தேவ மனிதர்களை எழுப்பி சாதாரண மக்களையும் ஏன் இஸ்லாமிய சுல்தான்களையும் கூட சந்தித்ததாக வரலாறு கூறுகிறது.

**16 ஆம் நூற்றாண்டு எழுப்புதல்**

கி.பி.15ஆம் நூற்றாண்டுகளில் இருண்டு கிடந்த சபைக்குள் தீப்பந்தமாக எழும்பி இருளை விரட்டியவர்தான் மார்டின் லூதர் (கி.பி 1483-1546). பதினாறாம் நூற்றாண்டில் இவரைக் கொண்டு தேவன் ஒரு யுகப்புரட்சியே நடத்தினார் என்றால் மிகையாகாது. இவரும் இவருக்குப்பின் வந்த ஸ்விங்லி மற்றும் ஜான் கால்வின் போன்றோர்தான் இன்று இருக்கும் புராட்டஸ்டாண்டு சபைகள் உருவாகக் காரணமானவர்கள். எனவே திருச்சபை வரலாற்றில் கி.பி.பதினாறாம் நூற்றாண்டு ஒரு திருப்புமுனையான நூற்றாண்டாகும்.

**17 ஆம் நூற்றாண்டு எழுப்புதல்**

அடுத்ததாக 16ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 17ம் நூற்றாண்டிலும் பலமடைந்த "ப்யூரிட்டன்" இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தனி மனிதனுடைய பரிசுத்தத்தை அதிகமாக வலியுறுத்தினார்கள். இவர்கள் அடிக்கடி நரகத்தைப் பற்றிப் பிரசிங்கித்து ஜனங்களை எச்சரிப்பார்கள். நாம் அனைவருக்கும் தெரிந்த "மோட்சப் பிரயாணம்" நூலை எழுதிய ஜான் பன்யன் இந்த ப்யூரிட்டன் இயக்கத்தைச் சார்ந்தவர் தான்.

**18 ஆம் நூற்றாண்டு எழுப்புதல்**

1727 ஆம் ஆண்டு ஜெர்மனியில் வாழ்ந்த மொரேவியன் மக்களிடையே வெடித்துக் கிளம்பிய எழுப்புதல் வரலாற்றில் பதிவான ஒரு குறிப்பிடத்தக்க எழுப்புதலாகும். கிறிஸ்துவின் சபையானது இரண்டாகப் பிரிந்து ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி சண்டையிட்டுக் கொண்டிருந்த வேளையில் ஜின் செண்டார்ஃப் என்ற தேவ மனிதன் எழும்பி அவர்களிடையே சமாதானம் செய்து வைத்து அவர்களை ஒன்றிணைத்து ஜெபித்த வேளையிலே ஆவியானவர் அளவில்லாமல் அவர்கள் மத்தியில் ஊற்றப்பட்டார். அன்று ஊற்றப்பட்ட எழுப்புதலானது அந்த நூற்றாண்டின் மாபெரும் மிஷனரிகளை உலகுக்கு உருவாக்கிக் கொடுத்தது. இந்த நூற்றாண்டில்தான் ஜான்வெஸ்லி, சார்லஸ் வெஸ்லி, ஜோனத்தான் எட்வர்ட்ஸ், ஜார்ஜ் ஒயிட்ஃபீல்ட் போன்ற மாபெரும் தேவ மனிதர்கள் கர்த்தரால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டார்கள். இவர்கள் ஊழியம் செய்த இந்த கால கட்டத்தை முதலாம் பெரிய ஆவிக்குரிய மறுமலர்ச்சிக் காலம் (The First Great Awakening) என்று அழைப்பார்கள்.

**19 ஆம் நூற்றாண்டு எழுப்புதல்**

19 ஆம் நூற்றாண்டில் இடம் பெற்ற எழுப்புதல்களை இரண்டாம் பெரிய ஆவிக்குரிய மறுமலர்ச்சி (The Second Great Awakening) என்பார்கள். இந்த நூற்றாண்டில் டைடஸ் கோன் என்ற தேவ மனிதரால் ஹவாய் நாட்டிலும், சார்லஸ் பின்னி மூலம் இங்கிலாந்திலும் பெரிய எழுப்புதல் உண்டானது.

1835ம் ஆண்டில் **தீத்து கோன்** (Titus Coan) என்பவர் ஹவாய் நாட்டின் கரையோரங்களில் வந்து இறங்கினார். அவரது முதல் சுற்றுப் பிரயாணத்தில் திரள் கூட்டத்தார் அவரது பிரசங்கத்தைக் கேட்கக் கூடி வந்தனர். அவர் சாப்பிடுவதற்கும் நேரமில்லாதபடி அவரைச் சூழ்ந்து நின்றனர். ஒரு சமயம் அவர் காலை ஆகாரத்தை அருந்து முன் மும்முறை பிரசங்கித்தார். தேவன் அற்புத விதமாய்க் கிரியை நடப்பிப்பதை அவர் உணர்ந்தார். 1837ல் அணைந்து கிடந்த அனல், மூண்டு எழுந்தது. நாடு முழுவதுமே கூடி வந்தது. 15,000 ஜனங்களுக்கு அவர் உபதேசித்தார். இத்தனை ஆட்களையும் அவர் சந்தித்துப் பேச முடியாததைக் கண்ட ஜனங்கள் தாங்களே அவரிடம் வந்து இரண்டு வருட காலமாகத் தங்கியிருந்து உபதேசம் கேட்டனர். மணிச்சத்தம் கேட்டவுடன் 2000 முதல் 6000 வரை மக்கள் இரவென்றும், பகலென்றும் பாராமல் கூடிவந்தனர்.

சபைக்குள் நடுக்கமும், அழுகையும், விம்மலும், இரக்கத்திற்காகக் கதறுதலும் காணப்பட்டன. சில சமயங்களில் பிரசங்கியாரின் தொனி கேட்கக்கூடாதபடி அழுகையின் சத்தம் அதிகரித்தது. நூற்றுக்கணக்கானோர் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தனர். “இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என்னைத் துண்டு துண்டாய் வெட்டுகிறது'' என்று சொல்லி சிலர் சத்தமிட்டனர். பரிகாசம் செய்யவும், நகைக்கவும் வந்த துஷ்டர்கள் நாயைப்போல் கீழே விழுந்து “கடவுள் என்னை அடித்தார்'' எனக் கூக்குரலிட்டனர். ஒரு சமயம் திறந்த வெளியில் 2000 ஜனங்களின் மத்தியில் அவர் பேசுகையில் ஒருவன், “இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்'' என்று உரக்கக் கூறி ஆயக்காரனின் ஜெபத்தை செய்தான். சபையார் யாவரும் தேவன் அவனுக்கு இரங்கும்படியாக மன்றாடினார்கள். அரைமணி நேரம் கோன் பிரசங்கியார் பேசாது நின்று கொண்டு தேவன் செய்யும் அற்புதக் கிரியைகளைக் கண்ணோக்கினார்.

சண்டை சச்சரவுகள் நீங்கின. குடிகாரர் குடியை விட்டனர். விபச்சாரக்காரர் குணப்பட்டனர். கொலை பாதகர் தங்கள் பாதகங்களை அறிக்கை செய்து மன்னிப்புப் பெற்றனர். திருடர்கள் தாங்கள் திருடின பொருள்களை திருப்பிக் கொடுத்தனர். வாழ்நாள் முழுவதும் நடப்பித்துவந்த பாவங்களும் விட்டொழிக்கப்பட்டன. ஒரே வருடத்தில் 5244 பேர் சபையில் சேர்ந்தனர். ஓர் ஓய்வு நாளில் 1705 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். கர்த்தரின் பந்தியில் 2400 பேர் பங்குபெற்றார்கள். ஒரு காலத்தில் இவர்கள் கொடிய பாவிகளாய் இருந்தார்கள். இப்பொழுதோ தேவனுடைய பரிசுத்தவான்களாக இருக்கிறார்கள். கோன் பிரசங்கியார் அவ்விடத்தை விட்டுப் போகும் சமயம் அவர் தாமே 11,960 ஆத்துமாக்களுக்குத் ஞானஸ்நானம் கொடுத்துச் சபையில் அவர்களை வரவேற்றுச் சேர்த்தார்.

1821ம் ஆண்டில் ஆடம்ஸ் (Adams) என்றதோர் சிறு பட்டணத்தில் ஒரு வாலிப வக்கீல், காட்டிலுள்ள ஒரு தனித்த இடத்திற்கு ஜெபிக்கச் சென்றார். தேவன் அவரை அங்கே சந்தித்தார். ஆச்சரியவிதமாய் அவர் குணப்பட்டு சீக்கிரத்தில் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார். அந்த வாலிபனே **சார்லஸ் பின்னி** (Charles G.Finney) என்பவர். இச்செய்தியைக் கேள்வியுற்ற ஜனங்கள் மிகவும் உற்சாகமடைந்து சாயங்காலத்தில் ஒரு வீட்டில் கூடி வந்தனர். பின்னி அங்கே வந்தார். தேவனுடைய ஆவியானவர் அவர்கள் மேல் வல்லமையாய் வந்து இறங்கினார். பாவங்களை உணர்த்தினார். அங்கே ஓர் உயிர்மீட்சி ஆரம்பித்தது. அங்கு உண்டான உயிர்மீட்சி பக்கத்திலுள்ள தேசத்திற்குப் பரவினது. கடைசியாக அது கிழக்கத்திய நாடுகள் முழுவதற்கும் பரவி ஒரு வல்லமையான எழுப்புதலை உண்டாக்கிற்று. ஃபின்னி பிரசங்கித்த பொழுதெல்லாம் ஆவியானவர் அபரிமிதமாய் ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்தினார். எப்படியென்றால் ஃபின்னி ஓர் இடத்திற்கு வந்து சேர்ந்தபோது அங்குள்ளோர் இரக்கத்திற்காகக் கெஞ்சிப் பிரார்த்திப்பதை அவர் கண்டார். சில சமயங்களில் பாவ உணர்வின் மிகுதியால் ஜனங்கள் வேதனையோடு அழுது புலம்பினபடியால் அழுகை முடியுமட்டும் பின்னி தன் பிரசங்கத்தை நிறுத்த வேண்டியதாயிற்று. சபை ஊழியரும் சபையாரும் ஏகமாய்க் குணப்பட்டனர். ஆயிரக்கணக்கில் பாவிகள் மனந்திரும்பினர். இந்த வல்லமையான கிருபையின் ஊழியம் அநேக வருடங்கள் நிறைவேற்றப்பட்டது. மனிதர்கள் தங்கள் வாழ்நாட்களில் இதைப் போன்ற செயல்களை ஒருபொழுதும் கண்டதில்லை.

### 20-ம் நூற்றாண்டில் எழுப்புதல்

20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பாவில் **வேல்ஸ்** (Wales) **தேசத்தில் உருவான எழுப்புதல்** பொன் எழுத்துக்களால் சபை சரித்திரத்தில் பொரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

1904-ம் ஆண்டில் வேல்ஸ் நாடு முழுமையும் எழுப்புதலினால் பிரகாசித்து ஜொலித்தது. அதற்கு முன்பு வரை தேசத்தார் தேவனை விட்டுத் தூரமாய் அலைந்து திரிந்தனர். ஆவிக்குரிய நிலைமை மெய்யாகவே தாழ்ந்த நிலையில் இருந்தது. ஆலயம் செல்வோர் வெகுசிலரே. எப்பக்கம் பார்க்கினும் பாவமே மிகுதி. திடீரென, எதிர்பாராது அடிக்கும் சூறாவளியைப் போல், தேவனுடைய வல்ல ஆவியானவர் தேசத்தின் மீது வீசலானார். ஆலயங்கள் நிறைந்தன. திரள் ஜனங்கள் ஆலயத்தினுள் செல்ல இடமின்றித் தவித்தனர். காலை 10 மணி முதல் இரவு 12 மணி வரை கூட்டங்கள் நிகழ்ந்தன. தினமும் திட்டமான மூன்று ஆராதனைகள் நடைபெற்றன. இந்த எழுப்புதலில் தேவன் உபயோகித்த மனிதன் யாரெனில்

**இவான் ராபட்ஸ்** (Evan Roberts) என்பவரே. ஆனால் அவர் பிரசங்கமோ மிகச் சொற்பம். பாட்டு, சாட்சி, ஜெபம் இவைகளே ஆராதனைகளின் முக்கிய அம்சங்கள். பாட்டு புத்தகங்கள் இல்லை, ஜனங்கள் குழந்தைப் பருவம் முதற்கொண்டே பாட்டுகளைக் கற்றிருந்தனர். பாடகர்களின் கூட்டம் இல்லை. ஏனெனில் ஒவ்வொருவரும் பாடினர், காணிக்கையும் இல்லை, விளம்பரமும் இல்லை.

இத்தனை பலனுள்ள ஊழியம் வேல்ஸ் நாட்டில் ஒரு பொழுதும் காணப்பட்டதேயில்லை. நாஸ்தீகர்கள் குணப்பட்டார்கள். குடிகாரரும், திருடரும், சூதாட்டக்காரரும் இரட்சிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் கண்ணியமான வாழ்க்கைக்குத் திரும்பினார்கள். எப்பக்கத்திலும் பயங்கரப் பாவங்களை அறிக்கை செய்யும் சத்தம் கேட்கப்பட்டது. பழைய கடன்கள் திரும்ப செலுத்தப்பபடடன. நாடகச் சாலைகள் ஆதரிப்போரின்றி கைவிடப்பட்டன. ஐந்து வாரங்களில் 20,000 பேர் திருச்சபையில் சேர்ந்தனர்.

**அசூசா தெரு எழுப்புதல்**

அசூசா தெரு எழுப்புதல் மிகவும் சரித்திர புகழ் வாய்ந்தது. இந்த எழுப்புதல் அமெரிக்காவில், கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள லாஸ் ஏஞ்சலஸ் பட்டணத்தில் ஏற்பட்டது. 34 வயது நிரம்பிய கருப்பு இனத்தை சேர்ந்த அடிமையாய் இருந்த ஒருவரின் மகனான வில்லியம் ஜே.செய்மூர் (William J. Seymour) மூலம் இந்த எழுப்புதல் ஏற்பட்டது.

இந்த எழுப்புதல் 1906ம் ஆண்டு ஏப்ரல் 14ம் தேதி ஆப்பிரிக்கா மெதடிஸ்ட் எப்பிஸ்கோப்பல் சபையில் (African Methodist Episcopal Church) ஆரம்பித்து 1914 ம் ஆண்டு வரை சுமார் பத்தாண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது.

இந்த அசூசா தெரு எழுப்புதலில் பரிசுத்த ஆவியானவரின் செயல்களும், அடையாளங்களும் அதிகமாய் காணப்பட்டன. இந்த எழுப்புதலில் அந்நிய பாஷை பேசுதல், தேவ பிரசன்னம் நிறைந்த துதி ஆராதனை, நிற வேறுபாடின்றி அனைத்து தரப்பட்ட மக்களும் சேர்ந்து ஆராதித்தல், ஆகிய சிறப்பம்சங்கள் காணப்பட்டன.

**கொரியாவில் எழுப்புதல்**

1900 ம் ஆண்டு 50,000 கிறிஸ்தவர்கள் மட்டுமே கொரியா தேசத்தில் வாழ்ந்து வந்தார்கள். கம்யுனிச தீவிரவாதிகள் மூலம் துன்புறுத்துதலும், உபத்திரவத்திரவங்களும் காணப்பட்டாலும் அங்கே 1907ம் ஆண்டு

எழுப்புதல் ஏற்பட்டது. 1990-ம் ஆண்டு 120 லட்சம் கிறிஸ்தவர்கள் தென் கொரியாவில் இருந்தனர். சியோல் பட்டணத்தில் மட்டும் 40 சதவீதம் கிறிஸ்தவர்கள் காணப்பட்டனர். மேலும் 7000 திருச்சபைகள் இந்த எழுப்புதல் மூலம் உருவாகிற்று. ஒவ்வொரு நாள் அதிகாலை ஐந்து மணிக்கு 10 லட்சத்திற்கும் மேற்பட்ட கொரிய கிறிஸ்தவர்கள் தங்கள் தேசத்திற்காகவும் உலக எழுப்புதலுக்காகவும் இன்றும் ஜெபித்து வருகின்றனர்.

**சீனாவில் எழுப்புதல்**

சீன தேசத்திலும் எழுப்புதல் நடைபெற்று வருகிறது. 1950-ம் ஆண்டு 40 லட்சத்திற்கும் குறைவான கிறிஸ்தவர்களே சீனாவில் இருந்தனர். ஆனால் இன்றைய நாளில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஒரு நாளைக்கு 25,000 என்று பெருகி வருகிறது. 1994 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் “அநேக இரவு கூட்டங்களும், அதிகமான அற்புத சுகமளிக்கும் கூட்டங்களும், அநேக ஞானஸ்நான ஆராதனைகளும் சீனாவில் எங்கும் காணப்படுகிறது” என்று கார்டியன் செய்தித்தாள் (The Guradian News Paper) செய்தி வெளியிட்டது.

**பிரவுன்ஸ்வில் எழுப்புதல் (Brownswille Revival)**

அமெரிக்காவிலுள்ள பென்சகோலா மகாணத்தில் பிரவுன்ஸ்வில் நகரிலுள்ள ஏஜி சபை போதகர் Rev. **ஜான் கீழ்பேட்ரிக்** (Rev. John Kilpatrick) அவருடைய சபை வளர்ந்து 2000 அங்கத்தினரை கொண்டதாக இருந்தபோதிலும், எழுப்புதல் இல்லாமல் இருந்தது. எழுப்புதலுக்காக 7 ஆண்டுகள் பாரத்தோடு ஜெபித்தார். 1995ம் ஆண்டு தேவன் அந்த சபையில் ஒரு பெரிய எழுப்புதலை கட்டளையிட்டார். ஜான் கீழ்பேட்ரிக் தன்னுடைய சபையின் எழுப்புதலை குறித்துக் கூறும்போது, ‘மனந்திரும்புதலினாலும் ஜெபத்தினாலும் பரலோகம் நிறைவும் வரை எழுப்புதல் வராது’ என்று கூறுகிறார். அந்த சபையின் எழுப்புதலை பார்க்க உலகின் பலநாடுகளிலிருந்து பாஸ்டர்கள் வந்தனர். திரும்பி போகும்போது தங்கள் சபைக்கும் நாட்டிற்கும் எழுப்புதலை எடுத்துச் சென்றனர். எழுப்புதல் ஆராதனையில் பங்கு பெற 3000 முதல் 5000 பேர் 10 மணி நேரம் வரை வரிசையில் நின்று பங்கு பெற்று செல்கின்றனர்.

அன்பு சகோதரனே, சகோதரியே! இந்த எழுப்புதல் செய்திகளை நாம் வாசிக்கும்போது நம் தேசத்திலும் சபையிலும் எழுப்புதல் ஏற்பட வேண்டும் என்ற வாஞ்சை நமக்குள் ஏற்படுகிறதல்லவா! நாமும் எழுப்புதலுக்காய் ஊக்கமாய் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நம் பட்டணங்களிலும், தேசத்திலும் எழுப்புதலை தருவார் என்பது நிச்சயம்! நிச்சயம்!

## எழுப்புதலின் கனிகளாகக் காணப்பட்டவை

பொதுவாக அனைத்து எழுப்புதல்களிலும் கீழ்காணும் கனிகளும், ஆசீர்வாதங்களும் காணப்பட்டது.

1. பரிசுத்த ஆவியானவரின் பின்மாரி மழை ஊற்றப்பட்டது. ஜனங்கள் யாவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்.
2. விசுவாசிகளும், ஊழியர்களும் தங்கள் பாவங்களை உணர்ந்து கர்த்தரிடத்திலும், ஒருவருக்கொருவரும், பொதுவான இடங்களிலும் அறிக்கை செய்து மனந்திரும்பினார்கள். தேவ அன்பினால் நிரப்பப்பட்டார்கள்.
3. கூட்டங்களுக்கு இடம் போதாத அளவுக்கு ஆட்கள் திரளாய் கடந்து வந்தார்கள்.
4. அவிசுவாசிகளாய் வந்தவர்கள் பாவ உணர்வடைந்து, கதறி அழுது, மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். கொள்ளையர்கள், குடிகாரர்கள், கொலைகாரர்கள், ரவுடிகள், அரசியல் தலைவர்கள் யாவரும் மனந்திருப்பினர்.
5. பலத்த அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெற்றன.
6. ஜெபக் கூட்டங்கள், நற்செய்திக் கூட்டங்கள் இடைவிடாமல் பல நாட்கள், மாதங்கள், வருடங்கள் ஒரே இடத்தில் நடை பெற்றுள்ளன.
7. சினிமா திரையரங்குகள், மதுபானக் கடைகள், போலீஸ் ஸ்டேஷன்கள், கேளிக்கை அரங்குகள் மூடப்பட்டுள்ளன.
8. வாரந்தோறும் ஞானஸ்நான ஆராதனைகள் நடைபெற்றன. ஒரு ஞானஸ்நான ஆராதனையில் பல நூற்றுக்கணக்கானோரும், இன்னும் சில ஆராதனைகளில் ஆயிரக் கணக்கோனரும் ஞானஸ்நானம் பெற்றுச் சபைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
9. ஜெப தாகம், ஆத்தும தாகம், வேத வசனத்தின் மேல் வாஞ்சை, கிறிஸ்துவின் மேல் அளவற்ற அன்பு இவைகள் கணக்கிலிட முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது.
10. கிறிஸ்து அறிவிக்கப்பட்டிராத இடங்களுக்கு கடந்து சென்று சுவிசேஷம் அறிவிக்கும் மாபெரும் மிஷனரி எழுப்புதல் ஏற்பட்டிருக்கிறது. 1859 ஆண்டு Oxford, Cambridge பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட எழுப்புதலின் விளைவாக தொடர்ந்து வந்த 50 ஆண்டுகளில் 20 ஆயிரம் பேர் மிஷனெரிகளாக புறப்பட்டுச் சென்றனர்.
11. ஜனங்கள் என்றும் இல்லாத அளவுக்குப் பணத்தையும், பொருட்களையும் தேவனுடைய ஊழியத்திற்காகவும், மிஷினரிப் பணிக்காகவும் கொடுத்தனர்.

12. பின்மாற்றக்காரர்களின் மனந்திரும்புதல் நடந்துள்ளது.

13. புறமத வழிபாடுகள் இல்லாமல் போயிற்று.

14. எழுப்பதலின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்களில் எண்பது சதவீதத்திற்கு மேலானோர் கிறிஸ்துவிலும், அவரது திருச்சபையிலும் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருந்தார்கள் என்று கூறப்படுகிறது.

## எழுப்புதலுக்கு நாம் செலுத்தவேண்டிய கிரயம்

**1. மனந்திரும்புதல் :**

**என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன். 2 நாளாகமம் 7:14.**

உண்மையான எழுப்புதலைக் காண விரும்பினால் அதற்கான விலைக்கிரயத்தை செலுத்த வேண்டும். முதலாவது, நம்முடைய பாவங்களிலிருந்து முழுமையான மனந்திரும்புதல் அவசியம். இரட்சிக்கப்பட்டவர்கள் மத்தியில் காணப்படும் பாவக்கிரியைகள் மறைய வேண்டும். நம்முடைய வாழ்க்கை தேவனுடைய பார்வையில் செம்மையாயிராமலும், பாவத்தை நம்மை விட்டு நீக்காமலும் நாம் ஜெபித்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் எழுப்புதலோ ஒருபொழுதும் வராது. “உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது, உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது” என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 59:2).

“ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள்” என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள், அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர், அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார் (யோவேல் 2 : 12-14). வேறு காரியங்களுக்காக ஜெபிப்பதை விட்டுவிட்டு, முதலாவது உங்கள் பாவத்தை மெய்யாகவே கர்த்தரிடம் அறிக்கை செய்து அதை விட்டுவிடுங்கள். தேவன் உங்கள் இருதயத்தைச் சோதித்துத் தடைகளை உங்களுக்கு வெளிப்படுத்தும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். பாவம் கண்டிப்பாய் அறிக்கை செய்யப்படவும், நீக்கப்படவும் வேண்டும். அப்பொழுதுதான் எழுப்புதலைக் காண முடியும்.

### ❖ பாவ அறிக்கையில் மூன்று விதங்கள் :

**1. தனித்த பாவ அறிக்கை** : தேவனுக்கு விரோதமாய் மட்டும் செய்த பாவத்தை தேவனுக்கு மட்டும் அறிக்கை செய்தல் போதுமானது. மற்றவர்களிடம் அதை அறிக்கையிட வேண்டியதில்லை (1 யோவான் 1: 9, சங்கீதம் 32:5).

**2. தனித்த ஆளிடம் பாவ அறிக்கை** : நாம் பிறருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்திருந்தால். தேவனிடம் மட்டுமல்ல, யாருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தோமோ, அந்த ஆளிடமும் போய் அறிக்கையிட்டு ஒப்புரவாக வேண்டும். அவ்விதம் செய்யாவிடில்,மெய்யான சமாதானமும், பாவ மன்னிப்பும் நாம் பெற்றுக்கொள்ளுதல் கூடாத காரியம் (மத். 5 : 23,24).

**3. பொதுவான பாவ அறிக்கை** : சபையாருக்கு விரோதமான பாவஞ் செய்திருந்தால், அந்தப் பாவத்தைச் சபையார் முன்னிலையில் அறிக்கை செய்தல் வேண்டும்.

### ❖ சுய பரிசோதனைக் கேள்விகள் :

**தேவனே என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னை சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். சங்கீதம் 139 : 23**

கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டு உங்களை ஆராய்ந்து பாருங்கள். மனந்திரும்ப வேண்டியவைகளிலிருந்து உடனடியாக மனந்திரும்ப ஒப்புக்கொடுங்கள்.

1. நாம் எல்லாரையும் மன்னித்திருக்கிறோமா? நம் இருதயங்களில் ஏதாவது கெட்ட எண்ணம், வன்கண், பகை, விரோதம் இருக்கிறதா? நாம் எரிச்சல் உள்ளவர்களாகவும், ஒப்புரவாக மனமற்றவர்களாகவும் இருக்கிறோமா?

2. நாம் கோபப்படுகிறோமா? நம் உள்ளத்தில் ஏதேனும் கொதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதா? நாம் இன்னும் கோபப்பட்டுக் கொண்டே இருக்கிறோமா? கடுங்கோபத்திற்கு நாம் அடிக்கடி ஆளாகிறோமா?

3. நமக்குள் பொறாமையின் அடையாளங்கள் காணப்படுகின்றனவா? அடுத்தவர்கள் புகழப்படும்போது, அது நமக்குள் சஞ்சலத்தை உண்டாக்குகிறதா? நம்மைவிட அதிகமாய் உடையவர்களையும், நம்மைவிட அதிகமாய் ஜெபிக்கவும், பேசவும், செய்யவும் கூடியவர்களை நாம் பார்க்கும்போது அவர்கள் மேல் பொறாமை கொள்கிறோமா?

4. நாம் பொறுமையற்றவர்களாயும், எளிதில் எரிச்சலடைகிறவர்களாகவும் இருக்கிறோமா? சிறிய காரியம் கூட நமக்குத் தொந்தரவாயும், வெறுப்பாயும் இருக்கிறதா? அல்லது எவ்விதச் சந்தர்ப்பத்திலும் நாம் பொறுமையாயும், சந்தோஷமாயும், குழப்பமில்லாமலும் இருக்கிறோமா?

5. நாம் எளிதில் வருத்தமடைகிறோமா? பிறர் நம்மைக் கண்டும் பேசாமல் போவதை நாம் பார்க்கும் போது, அது நமக்கு வேதனை தருகிறதா? மற்றவர்கள் கனப்படுத்தப்பட்டும், நாம் அசட்டை செய்யப்பட்டும் இருக்கும் நேரங்களில் நமக்குள் எந்த உணரைச்சி ஏற்படுகிறது?

6. நமது இருதயங்களில் ஏதேனும் பெருமை உண்டா? நாம் கர்வங்கொள்ளுகிறோமா? நமது அந்தஸ்தைக் குறித்தும், படிப்பைக் குறித்தும், தாலந்தைக் குறித்தும் பெருமிதங்கொள்கிறோமா?

7. நாம் உண்மையற்றவர்களாக இருந்திருக்கிறோமா? நமது வாழ்க்கை குறைக் கூறப்படாத நிலைமையில் இருக்கிறதா? நாம் யோக்கியமாய் நடக்கிறோமா?

8. நாம் வீண் பேச்சுக்காரராயிருக்கிறோமா? மற்றவர்களின் நடத்தையைப் பற்றி அவதூறாய்ப் பேசுகிறோமா? பிறர் காரியத்தில் தேவையில்லாமல் தலையிடவும், கோள் சொல்லுகிறவர்களாகவும் இருக்கிறோமா?

9. நாம் பிறரை அன்பில்லாமலும், கடினமாகவும், கொடுரமாகவும் நியாயந்தீர்க்கிறோமா? நாம் எப்பொழுதும் குற்றம் கண்டுபிடிக்கிறவர்களாகவும், பிறருடைய சிறு தவறுதலையும் பெரிதெனப் பேசுகிறவர்களாகவும் இருக்கிறோமா?

10. நாம் தேவனை வஞ்சிக்கிறோமா? அவருக்குரிய நேரத்தை நாம் திருடி இருக்கிறோமா? அவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை கொடாமல் வைத்திருக்கிறோமா?

11. நாம் உலகத்தாரைப் போல் வாழுகிறோமா? இவ்வுலக ஆடம்பரங்களையும், அதன் ஆசை இச்சைகளையும் நேசிக்கிறோமா?

12. நாம் களவு செய்திருக்கிறோமா? நமக்குச் சொந்தமல்லாத ஒரு சிறு பொருளையாவது எடுத்து வைத்திருக்கிறோமா?

13. நம் உள்ளத்தில் பிறர் மேல் கசப்பு இருக்கிறதா? நமது இருதயங்களில் கசப்பையும், பகையையும பேணிவைத்திருக்கிறோமா?

14. நமது வாழ்க்கை மாயையினாலும், அற்பத்தனத்தினாலும் நிறைந்திருக்கிறதா? நம் நடக்கை அருவருக்கப்படத்தக்க நிலையில் இருக்கிறதா? உலகம் நம்மைக் கண்டு தன் பக்கம் நம்மைச் சேர்த்திருக்கிறதா?

15. நாம் யாருக்காவது கெடுதல் செய்து, அதற்குப் பதிலீடு செய்யாமல் இருக்கிறோமா? அல்லது சகேயுவின் சிந்தை நமக்குள் வந்திருக்கிறதா? தேவன் நமக்கு வெளிப்படுத்திக் காட்டின அநேக சிறுசிறு காரியங்களை நாம் சரிப்படுத்தியிருக்கிறோமா?

16. நாம் கவலையுள்ளவர்களாகவும், துக்கம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறோமா? நமது இதரத் தேவைகளுக்காக நாம் கடவுளிடம் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோமா? நாம் நாளைக்காகக் கவலைப்படுகிறவர்களாயிருக்கிறோமா?

17. மாம்ச இச்சைக்கு நாம் இடங்கொடுத்திருக்கிறோமா? நம் உள்ளத்தில் அசுத்தமான எண்ணங்கள் குடி கொண்டிருக்கின்றவா?

18. நம் வார்த்தையில் உண்மை அல்லது சத்தியம் காணப்படுகிறதா? அல்லது ஒன்றைப் பத்தாகப் பேசி, துரும்பைத் தூணாக்குகிறோமா? தப்பிதமான எண்ணத்தைப் பிறர் உள்ளத்தில் உண்டாக்குகிறோமா? நாம் பொய் பேசியிருக்கிறோமா?

19. அவிசுவாசமாகிய பாவத்திற்கு நாம் இடங்கொடுத்திருக்கிறோமா? கர்த்தர் நமக்குச் செய்த எண்ணிறந்த நன்மைகளை நாம் மறந்தவர்களாய் இன்னும் அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்க மறுக்கிறோமா?

20. ஜெபம் செய்யாமை என்ற பாவத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோமா? நாம் பரிந்துபேசுகிறவர்களாயிருக்கிறோமா? நாம் ஜெபிக்கிறோமா? நமது முழங்காலில் நின்று எத்தனை முறை ஜெபிக்கிறோம்? நமது வாழ்க்கை பல வேலைகளினால் நிறைந்திருக்கிறபடியால், அங்கு ஜெபத்திற்கு இடமில்லையா?

21. நாம் வேத வாசிப்பை அசட்டை செய்திருக்கிறோமா? தினமும் எத்தனை அதிகாரங்கள் வாசிக்கிறோம்? நாம் வேத மாணக்கரா? வேதத்திலிருந்து ஆதாரங்களை நாம் எடுக்கிறோமா?

22. நாம் பகிரங்கமாய்க் கிறிஸ்துவை வெளிப்படுத்தத் தவறினோமா? இயேசு கிறிஸ்துவை பற்றி நாம் பிறரிடம் கூற வெட்கப்படுகிறோமா? உலகத்தார் மத்தியில் நாம் இருக்கையில் அவரைப் பற்றிப் பேசாமல் வாயை மூடுகிறோமா? நாம் தினமும் சாட்சி கொடுத்து வருகிறோமா?

23. ஆத்துமாக்களைப் பற்றிய பாரம் நிறைந்தவர்களாய் இருக்கிறோமா? கெட்டுப்போன ஆத்துமாக்களின் மேல் அன்புள்ளவர்களாயிருக்கிறோமா? அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காகப் பரிந்து பேசும் சிந்தை ஏதேனும் நம்மில் உண்டோ?

நம்முடைய பாவங்களை தேவனிடம் அறிக்கைச் செய்து, ஒப்புரவாக வேண்டியவர்களிடம் ஒப்புரவாகி, கர்த்தரை நம் முழு இருதயத்தோடும் தேடுவோமானால் நிச்சயமாக தனிப்பட்ட வாழ்விலும், திருச்சபையிலும் எழுப்புதல் உண்டாகும்.

## 2. ஜெபம்

**“தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படிச் செய்யும்” (ஏசாயா 64:2).**

எழுப்புதலைப் பற்றவைக்கும் தீப்பொறி ஜெபம்தான். ஜெபமின்றி எழுப்புதல் இல்லை. ஏசாயா 64-ம் அதிகாரம் முழுவதுமே எழுப்புதலுக்கான ஜெபம்தான்! இருதயத்தை ஊற்றி, அக்கினியை இறங்கபண்ணும் ஜெபம் இது!

1857 ஆம் ஆண்டு அமெரிக்கா முழுவதிலும் எழுப்புதல் அக்கினி பரவ ஆரம்பித்தது! ஒவ்வொரு அந்தகார சக்தியின் தடையும் தகர்ந்து, பெரிய ஆத்தும அறுவடை நடந்தது. கர்த்தர் வானத்தின் பலகணியைத் திறந்து பரிசுத்த ஆவியை அளவில்லாமல் ஊற்றிக்கொண்டிருந்தார்.

இந்த எழுப்புதல் எப்படி, எங்கிருந்து, யார் மூலமாய் ஆரம்பித்தது என்று அவர்கள் கண்டுபிடிக்க விரும்பினார்கள். கடைசியில், பெயர் புகழை விரும்பாமல், தனிமையின், அந்தரங்கத்தில் இருதயத்தை ஊற்றி ஜெபித்துக் கொண்டிருந்த ஒரு ஜெபவீரனைக் கண்டுபிடித்தார்கள். ஒவ்வொரு நாளும் அவர் மத்தியான உணவை வெறுத்து, முழங்காலில் நின்று, “ஆண்டவரே, எங்கள் தேசத்தைச் சந்தியும்” என்று மன்றாடிக் கொண்டிருந்தார். அந்த ஜெபம் அநேகரை ஈர்த்தது. அவர்களும் இவரோடு ஒருமனமாய் கூடி கண்ணீரோடு மன்றாட ஆரம்பித்தார்கள். நாளுக்கு நாள் ஜெபிக்கிறவர்களின் எண்ணிக்கையும் ஜெபதாகமும் அதிகரித்தது. ஜெபத்தைக் கேட்கிறவர், வானங்களைக் கிழித்து, உருக்கும் அக்கினி எரியுமாய்ப் போல் வல்லமையாய் இறங்கினார்!

எங்கெல்லாம் எழுப்புதல் அக்கினி ஊற்றப்பட்டதோ, அதற்கு பிண்ணனியில் ஊக்கமாய் ஜெபிக்கும் ஜெபக் குழுக்கள் இருந்திருக்கின்றன! மன்றாட்டு வீரர்கள் உருண்டு புரண்டு, போராடி கண்ணீரோடு ஜெபித்திருக்கின்றனர்! மார்டின் லூத்தர், சார்லஸ் பின்னி, டேவிட் பிரைனார்டு, இவான் ராபர்ட்ஸ் போன்றவர்கள் பல மணி நேரங்கள், பல நாட்கள், மாதங்கள் கண்ணீரோடு ஜெபித்த ஜெபங்களைக் கேட்டு தேவன் தேசங்களில் எழுப்புதலை அனுப்பினார்!

தேவ ஜனமே! உன் ஜெப ஆவியை அனல்மூட்டி எழுப்பிவிடு! ஜெபதாகத்தை உன் நரம்புகளில் முறுக்கேற்றிக்கொள்! ஜெபம் தனி மனிதனை மாற்றுகிறது! சபைகளை சீர்திருத்துகிறது! எழுப்புதல் அக்கினியை பட்டணத்திலும், தேசத்திலும் பற்றவைக்கிறது! புது சரித்திரத்தை ஏற்படுத்திவிடுகிறது! அல்லேலூயா! ஆகவே உன் மூலம் ஓர் எழுப்புதலின் அக்கினி தேசத்தைப் பற்றி, பரவி பிடிக்க முக்கியமாக மூன்று காரியங்களுக்காக தினமும் ஜெபிக்க மறவாதே.

**1. உன் தனிப்பட்ட வாழ்க்கையில் ஓர் எழுப்புதலுக்காக**

எழுப்புதல் உன்னில் முதலாவது ஆரம்பிக்கட்டும். தனிப்பட்ட வாழ்க்கையில் உன்னை நீ மிகவும் தாழ்த்தி, மனம் கசந்து அழுது ஜெபிக்க ஒப்புக்கொடுப்பாயானால், எழுப்புதல் அக்கினி உன்னில் ஊற்றப்படும். பின்பு உன்னிலிருந்து உன் குடும்பம், உன் சபை, உன் ஊர் என பரவும்!

**2. பரிசுத்த ஆவியின் பின்மாரிக்காக.**

இது பரிசுத்த ஆவியின் பின்மாரிக்காலம் (யோவேல் 2:28, 29)! பரிசுத்த ஆவியானவரையும் எழுப்புதலையும் பிரிக்க முடியாது. பரிசுத்த ஆவியின் வல்லமை ஜனங்கள் மேல் ஊற்றப்படும்போது ஜனங்கள் உயிர்மீட்சி அடைவார்கள். செத்த நிலைகள் மாறும் (எசே.37:5, 6)!

**3. அழிந்துபோகிற ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட**

கர்த்தர் ஆத்தும வருத்தத்தின் பலனைக் காண்கிறவர் (ஏசாயா 53:11). எழுப்புதலின் நோக்கமே, ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதில் தான் இருக்கிறது!

பள்ளிக்கூடங்கள் மூலமாக, மருத்துவமனைகள் மூலமாக, ஆத்துமாக்களை சந்திக்க முயல்கிறோம். ஏழை மக்களுக்கு உணவு வழங்கி, உடை வழங்கி, கிறிஸ்துவண்டை கவர்ச்சிக்க முயல்கிறோம். இதன் மூலம் ஒரு சில சதவீதம் தான் மக்கள் இரட்சிக்கப்படுகின்றனர். தெருப்பிரசங்கம், துண்டுப்பிரதிகளில் எல்லாம் ஐந்து சதவீதம் தான் பலன்.

ஆனால் எழுப்புதல் தீ பரவும்போதோ 90 சதவீதத்திற்கு மேலாய், தீவிரமாக ஆத்துமாக்கள் சந்திக்கப்படுகிறார்கள். 1904 ஆம் ஆண்டு வேல்ஸ் தேசத்தில் எழுப்புதலின் பலனாக ஆறே மாதங்களுக்குள் ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள். கள்ளுக்கடைகள் எல்லாம் பறந்து போயின. நாடக நடனக்கூடங்கள் இழுத்து மூடப்பட்டன. கொலை, கொள்ளைகள், பெருமளவில் குறைந்தன. போலீசாருக்கே வேலையில்லாமல் போய் விட்டது!

தேவ பிள்ளையே, ஆத்துமாக்கள் திரள் திரளாக இரட்சிக்கப்பட கண்ணீரோடு ஜெபிப்பாயாக. கிறிஸ்து நம் தேச மக்களின் இருதயத்தில் உருவாகும்படி, அவர்களுக்காக கர்ப்ப வேதனையோடு ஜெபிப்பாயா? உன் ஜெப கண்ணீர்த்துளிகள் தேசத்தின் அஸ்திபாரத்தை அசைக்கும் என்பதை மறந்து போகாதே. ஆகவே, இப்பொழுதே ஜெபிக்க ஆரம்பித்துவிடு.

# எழுப்புதலுக்கான ஜெபக்குறிப்புகள்

I. **தனிப்பட்ட வாழ்வில் எழுப்புதல் :**

1. சுயத்திற்கு முழுமையாக மரித்து, கிறிஸ்துவின் சிந்தை உண்டாக ஜெபியுங்கள்.
2. தேவனோடு உள்ள ஐக்கியம் நாளுக்கு நாள் பெருகிட (குறிப்பாக ஜெபம், வேத தியானம்) ஜெபியுங்கள்.
3. தேவனின் பாரத்தை, தனிப்பட்ட விதத்தில் முழு நிச்சயத்தோடு அறிந்துகொண்டு, அதற்காக அர்ப்பணிக்க, பிரயாசப்பட ஜெபியுங்கள்.
4. ஆத்தும ஆதாயப்பணிக்காக, ஊழியம் செய்வதற்கேற்ற இருதயத்தை, ஆத்தும பாரத்தை தேவன் தரும்படி ஜெபியுங்கள்.

II. **குடும்பத்தில் எழுப்புதல் :**

1. குடும்ப உறவுகளில் உண்மையான அன்பை பகிர்ந்து கொள்ள, பெற்றோரை கனம் பண்ணுதல், கீழ்படிதல், தேவனுடைய அன்பு நம்முடைய குடும்பங்களில் காணப்பட ஜெபியுங்கள்.
2. குடும்பமாய் ஒன்றிணைந்து குடும்ப ஜெபம் செய்ய, அதற்குரிய தடைகள் நீங்க ஜெபியுங்கள்.
3. ஒருவருக்கொருவரில் உள்ள (உடைக்கப்பட்ட, சரியில்லாத) உறவுகள் சரி செய்யப்பட ஜெபியுங்கள்.
4. குடும்பத்தில் இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்பட

III. **சபையில் எழுப்புதல் :**

1. சபைக்குள்ளே வருகிற ஒவ்வொரு விசுவாசியும், மக்களும் முழுமையான, மெய்யான மனந்திரும்புதலைப் பெற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
2. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதில் பெருகிட ஜெபியுங்கள்.
3. ஒவ்வொரு சபையும் கர்த்தருடைய ஊழியத்தில் வளர்ந்து பெருக, தேவசித்தத்தை நிறைவேற்ற ஜெபியுங்கள்.
4. விசுவாசிகளிடையே காணப்படும் மாய்மாலம் (தாழ்மையில், அன்பில், பரிசுத்தத்தில்) விலகிடவும், அன்பிலே பெருகிடவும் ஜெபியுங்கள்.

**IV. பட்டணத்தில் எழுப்புதல் :**

1. பட்டணத்தில் உள்ள எல்லா அருவருப்புகளும் (விக்கிரகாராதனை, வேசித்தனங்கள்) அழிக்கப்பட்டு, தேவனைத் தேடுகிற விருப்பம் ஜனங்களிடத்தில் உண்டாக ஜெபியுங்கள்.
2. கிறிஸ்து இயேசுவின் நாமம் மகிமைப்படும்படியாய் வீதிகள் தோறும், வீடுகள் தோறும் சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபியுங்கள்.
3. பட்டணத்தில் பாவ உணர்வும், மனந்திரும்புதலும் உண்டாக ஜெபியுங்கள்.
4. பட்டணத்தில் உள்ள அனைவரும் இரட்சிக்கப்பட, திருச்சபைகள் வளர்ந்து பெருக, பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்பட ஜெபியுங்கள்.

**V. தேசத்தில் எழுப்புதல் :**

1. தேசத்தின் அருவருப்புகள் அழிக்கப்பட்டு, தேசம் தேவனுக்கேற்ற கிரியைகளில் வளர்ந்து பெருக ஜெபிப்போம்.
2. சுவிசேஷ ஊடுருவல் தேசத்தில் தங்கு தடையின்றி நடைபெற, அதற்கு ஏற்றாற்போல அரசியல் சூழ்நிலைகள் தலைவர்களின் மனப்பான்மை மாறுவதற்காக ஜெபிப்போம்.
3. தேசத்தில் இயேசுவின் நாமத்தை பரவவிடாமல் தடை செய்கிற, பொல்லாங்கன் விதைகள் களைகள் பிடுங்கியெறியப்பட, தேசத்தில் தேவ சமாதானம் பெருகிட ஜெபிப்போம்.
4. ஒரு கிறிஸ்தவ தேசமாய், நமது தேசம் திகழ்ந்திட ஜெபிப்போம்.



எழுப்புதலே எங்கள் வாஞ்சை
எழுப்புதல் தாரும் தேவா
பரிசுத்த ஆவியின் எழுப்புதல்
பரவட்டும் எங்கள் தேசத்தில்

அந்தகார இருள் முற்றும் அகலவே
ஆவியின் மழையை ஊற்றுமே
அனலாய் கொழுந்து விட்டெரிய
அக்கினியால் எம்மை நிரப்பும்

இந்தியாவின் எல்லைகளெங்கிலும்
இயேசுவின் இரத்தம் பூசப்படட்டுமே
இயேசுவே ஆண்டவர் என்ற முழக்கம்
இன்றே தொனிக்கச் செய்யும்

எங்கள் தேசத்தை அழிக்க வேண்டாம்
நாங்கள் திறப்பினில் நிற்கிறோம்
தேவ கோபம் மாற வேண்டும்
தேசம் இயேசுவைக் காணவேண்டும்

எங்கள் சபைகள் உயிர்மீட்சி அடைய
ஆவியானவரே அருள் புரியும்
பெருமழையின் சத்தம் கேட்க
எங்கள் செவிகளைத் தூய்மையாக்கும்.

பாடல் எழுதியவர்
சகோ. வெஸ்லி மேக்ஸ்வெல்

# City Revival AG Church

Jenne Plaza, Cantonment, Trichy- 1
E-mail: jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org
9443415484, 0431-4040140